**Dinakaran, Coimbatore, August 26, 2010**

### வினாடி வினா

# தேசிய சுற்றுக்கு குன்னூர் மாணவர்கள் தகுதி

கோவை, ஆக.26: டாடா கன்சல்டன்சி சர்வீஸ்சஸ் சார்பில் கோவை பிராந்திய அளவிலான டிசிஎஸ் ஐடி வினாடி வினா போட்டி கோவை ஆர்எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கில் நடந்தது.

இப்போட்டியில் ஒரு பள்ளிக்கு இரு மாணவ, மாணவியர் வீதம் 1322 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இறுதி சுற்று போட்டியில் குன்னூரை சேர்ந்த ஸ்டேன்ஸ் பள்ளி, கோத்தகிரியை சேர்ந்த ஜூட்ஸ் பள்ளி, கோவை லிசிக்ஸ் பள்ளி, கோவை அழகப்பா பள்ளி, ஜி.டி. பள்ளி உட்பட 6 பள்ளிகளை சேர்ந்த 12 மாணவர்கள் பங்கேற்றனர். இதில் குன்னூர் ஸ்டேன்ஸ் பள்ளி மாணவர்கள் நிதின்வித்ய பிரகாஷ், ஸ்ரீகாந்த ஸ்ரீதர் ஆகியோர் கொண்ட அணி 85 புள்ளிகள் பெற்று முதலிடத்தை பெற்றது. இவர்கள் இருவரும் தேசிய அளவில் நடைபெறும் சுற்றுக்கு தகுதி பெற்றனர். கோத்தகிரி ஜூட்ஸ் பள்ளி மாணவர்கள் சுரேஷ்சர்மா, வெங்கடேஷ் ஆகியோர் 45 புள்ளிகள் பெற்று 2ம் இடத்தை பிடித்தனர். லிசிக்ஸ் பள்ளி மாணவர்கள் ராபின்சன், மோகித் 25 புள்ளிகள் பெற்று 3வதாக வந்தனர். முதலிடத்தை பிடித்த ஸ்டேன்ஸ் பள்ளி மாணவர்கள் இருவருக்கும் ₹ 90 ஆயிரம் மதிப்புள்ள பொருட்கள் பரிசாக வழங்கப்பட்டன. 2வது இடத்தை பிடித்த ஜூட்ஸ் பள்ளிக்கு ₹ 70 ஆயிரம் மதிப்புள்ள பொருட்களும், மற்ற நான்கு பள்ளி மாணவர்களுக்கும் தலா ₹ 5000ம் பரிசாக அளிக்கப்பட்டன.

கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையின் தலைவர் டி.கே. அனந்தபத்மநாபன், டிசிஎஸ் குளோபல் அலையன்சஸ் துணை தலைவர் கே.ஜெயராமகிருஷ்ணன் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.